**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை- 2017
## Term Examination, July - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 12 (2018) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### விடைகள்

### பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 11) 5 | 21) 5 | 31) 1 |
| 2) 2 | 12) 5 | 22) 4 | 32) 2 |
| 3) 5 | 13) 5 | 23) 3 | 33) 5 |
| 4) 2 | 14) 4 | 24) 3 | 34) 3 |
| 5) 2 | 15) 4 | 25) 1 | 35) 2 |
| 6) 1 | 16) 3 | 26) 5 | 36) 5 |
| 7) 4 | 17) 2 | 27) 1 | 37) 1 |
| 8) 2 | 18) 5 | 28) 5 | 38) 1 |
| 9) 5 | 19) 4 | 29) 3 | 39) 1 |
| 10) 3 | 20) 4 | 30) 1 | 40) 3 |

The National e-Learning Portal for The General Education

### பகுதி – II

*01.*

1. அரிஸ்ரோட்டில் - போலச் செய்தல்
   பிகோராகேம்பிறிச் - பருவகால மாற்றங்கள் அடியாக
   தொம்சன் - சடங்கின் அடியாக
   போர்ணாட்ஷா – நாடகம் வாழ்க்கையின் துண்டம்

2. மனித மோதுகையை சித்தரிப்பது
   பிறந்தவுடன் இறந்து விடும்
   அனைத்துக் கலைகளும் சங்கமிப்பது
   மனித உணர்வுகளை பிரதிபலிப்பது
   உடன் எதிர்கொள்ளக் கூடியது
   கலைஞர்கள் சங்கமிப்பது
   முரனைச் சித்தரிப்பது.

3. சடங்கிலிருந்து நாடகம் வரையான வளர்ச்சிப் படிநிலை 4 வகைப்படும்
   1) மதகுரு தெய்வமாக ஆடுதல்
   2) மதகுரு இயக்க, ஒருவர் தெய்வமாக ஆடுதல்
   3) ஐதீக கதை அடிப்படையாக கொண்டவை
   4) நாடகம் தனியாகப் பிரியத் தொடங்கியது.

*02.*

1) நிருத்த, நிருத்திய, நாட்டிய தனித்துவங்களை கூறியிருப்பின் புள்ளி வழங்கவும்

| 2) லோக தர்மி | நாட்டிய தர்மி |
|---|---|
| 1) தொல்காப்பியம் உலகியல் வழக்கு என்கிறது | தொல்காப்பியம் நாடக வழக்கு என்கிறது |

| | |
|---|---|
| 2) உள்ளதை உள்ளவாறு காட்டும் நடிப்புமுறை | யதார்த்த விரோத நடிப்பு முறை |
| 3) இயல்பான அபிநயம் கொண்டது | ஒருபாத்திரத்தை பலர் ஏற்று நடித்தல் |
| 4) போலித்தன்மை அற்றது | மிகைப்படுத்தப்பட்ட ஒப்பனை வேட உடை |
| 5) இயல்பான நடத்தை கதையைக் கொண்டது | மோடியற்ற அங்க அசைவுகள் உடையது. |

*03.*

| மார்க்த | தேசிய |
|---|---|
| மார்க்க சாஸ்திர நிலைப்பட்டது | தேசிய சாஸ்திர நிலைப்பட்டது |
| நாட்டியச ஙாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள 10 மரபுகளைக் கொண்டது. | இது பிரதேசங்களின் தன்மை கொண்டது |
| இதற்கென வகுக்கப்பட்ட மரபிற்கூடாக நிகழ்த்தப்படும். | பண்பை பிரதிபலிப்பது. |
| சமூகத்தில் உயர்மட்டத்தினருக்குரிய அரங்காகும். | இது பிரதேசங்களின் தனித்துவங்கள் வெளிப்படுத்தப்படும். |
| | இலக்கண மரபு விதிகளிற்கு அப்பாற்பட்டது. |

*04.*

1) சோபோ.:.கிஸிஸ்
2) சிந்தனை, சொல்லாடல், பாத்திரம், இசை பாடல் காட்சி, கதைப் பின்னல்.
3) அன்ரிக்கனி, இசுமனி, கிரையோன், ஏமன், கியூரிடிசி தெய்ரீசியஸ், சிறுவன் காவலாளி, தீவிய முதியோர்.
4) அன்ரிக்கனி, கிரையோன் ஆகிய பாத்திரங்களின் பண்புகள் விளக்கப்படல் வேண்டும்.

*05.*

1) ஆங்கீக அபிநயம்    வாக்சீக அபிநயம்
   சாத்வீக அபிநயம்    ஆகார்ய அபிநயம்
2) ஒவ்வொரு அபிநயத்தின் தொழிற்பாடுகள் பற்றிக் கூறுதல்
3) நாடகம் ஒன்றில் நான்கு அபிநயமும் ஒன்றிணைந்து தொழிற்படுவதையும் அதனால் ஏற்படும் முழுமை என்பன பற்றி விளக்குதல்.

*06.*

1) பாண்டவர் வனவாசம்
   - பாரதக் கதையை மீழ் நிகழ்த்திக் காட்டுவதாகும். சடங்காகும்.
   - பாண்டவர் வேடமிட்டு வனவாசம் செய்வர்.
   - மட்டக்களப்பு கல்முனை அருகே பண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் இடம் பெறும்.
   - 18 நாள் சடங்கில் 16ம் நாள் சடங்காக இது இடம் பெறும்.
   - அஞ்ஞாக வாசம் செய்யும் காலப்பகுதியாக வீமன் உள்முழுதும் சென்று உணவுப்பொருள் சேகரிப்பவர்.
2) உடக்குப்பாஸ்
   - கிறிஸ்தவ மக்களில் தவக்கால வழிபாட்டுடன் சடங்காக நிகழ்த்தப்படும்.
   - இது பாஸ் எனப்படும் உறைநிலைப் பொம்மைகளைக் கொண்ட தியானச் சடங்காகும்.

- மரத்திலான பொம்மைகளைக் கொண்டு இயேசுவின் பாடுகளை சித்தரித்துக்காட்டும் மரபாகும்.
- மன்னார் பேசாலையில் இன்று வரை நிகழ்த்தப்பட்டு வருகிறது.
- இதற்கென பிரத்தியோக மேடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

3) சொக்கரி
- சிங்கள பாரம்பரிய கிராமிய நாடக வடிவம்
- பாய் இழைக்கும் கின்னரய சாதியினர் நிகழ்துவர்
- வயல்வெளிக் களத்து மேட்டில் நிகழ்த்தப்படும்.
- பத்தினி வழிபாட்டை அடிப்படையாக கொண்டது.
- தமிழரிடையே காணப்படும் மகிடிக் கூத்திற்கு ஒப்பிடலாம்.

07.

1) பலே
- நடனப் பாணியை ஊடகமாகக் கொண்ட அளிக்கை வடிவமாகும். 16ம் நூற்றாண்டில் இத்தாலியில், பிரான்சிலும் தோன்றியது.
- 19ம் நூற்றாண்டில் உலகெங்கும் பரவியது, பின்னணி இசை பிரதானமாக காணப்படும் பின்னனிக்காட்சி, ஒளியாட்டல், வேட உடை, ஒப்பனை பயன்படுத்தப்படுகிறது.

2) நூர்தி
- சிங்கள இசை நாடகம் - பாடல் பிரதானம்
- சார்ள்ஸ் டயஸ்
- ஒருபக்கப் பார்ப்போரைக் கொண்ட அரங்கு – டவர்ஹோல் மரபு
- பகட்டான ஆடை அணிகள், சீனறிகள்

3) நடன நாடகம்
- இந்நாடகங்கள் இலங்கையில் 'நிருத்திய' எனப்பெயர் பெற்றது
- கீழைத்தேய நிருத்திய நாடகங்களை அடிப்படையாகக் கொண்டது.
- நடனமே பிரதான வெளிப்பாட்டு ஊடகம்
- பின்னணி இசை மற்றும் பாடல் மூலம் நாடகத்தின் வெளிப்பாட்டு ஆற்றல் விருத்தி செய்யப்பெறும்
- மேலைத்தேய பலே நாடகத் தாக்கம் இதிலுள்ளது.
- மேடையலங்காரம், பல்வேறு வகையில் பயன்படுத்தப்பெறும்.

4) ஒப்பேறா
- கி.பி 1600 களில் இத்தாலியில் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய ஒரு நாடக வடிவமாகும்.
- பாடல், வாத்திய இசை ஆகியவற்றைப் பிரதானமாகக் கொண்டது.
- காவியமொழி பயன்படும்
- பீஜிங் ஒபேறாவில், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற சமூகப் பிரச்சினைகளை ஆழமாக முன் வைப்பர்.

5) நாடகம
- சிங்கள பாரம்பரிய அரங்கு
- எதிர்வீர சரச்சந்திரா முக்கியமானவர்
- இவரது மனமே, சிங்கபாகு பிரதானமானவை
- பொத்தே குரு
- கரளிய – ஆற்றுகைவெளி
- முதலாவது நாடகம – எகலப்பொல – பிலிப்பு சிஞ்ஞோ

The National e-learning Portal for The General Education